# <u>குளித்தலை நகராட்சி</u>

28.02.2018.ஆம் தேதி புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்–01. அங்கீகாரம் இல்லாத மனைப்பிரிவு மற்றும் மனைகளை முறைப்படுத்துதல் விதிகள் 2017–ஐ நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 113 மற்றும் 122.ல் அமலாக்கம் செய்து அறிவிக்கை செய்யப்பட்ட அரசாணை எண் GO(MS)No.172, நாள்–13.10.2017, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி துறையின் அரசாணையை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1107/2017/பி2)

பொருள்–02. குளித்தலை நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் பிப்ரவரி–2018.ஆம் மாத தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்–03. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி–2018.ஆம் மாத தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்–04. குளித்தலை நகராட்சி குடிநீர் பிரிவு லாரி எண்.TN-47-E-0264.ன் ஆயுள்காப்பீடு 16.02.2018.ல் முடிவடைகிறது. அதனை புதுப்பிக்க ரூ.19080/– கட்டணத்தினை யுனைடெட் இந்திய இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதிக்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர்(ம) தனி அலுவலர் முன்அனுமதி பெற்று ரூ.19080/–க்கு செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொண்டதையும் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.369/2018/இ1)

பொருள்–05. குளித்தலை நகராட்சி குடிநீர் பிரிவு ஈப்பு TN-47-X-3173 ஆயில் சர்வீஸ் உள்ளிட்ட அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியம். அதற்குரிய செலவினம் ரூ.11,964/–ஐ, அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர் சிவா ஆட்டோமொபைல்ஸ்(பி) லிட்., கரூர் நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதிக்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர்(ம) தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும், பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.187/2018/இ1)

பொருள்–06. குளித்தலை நகராட்சி பேருந்து நிலையம், திருச்சி மார்க்கம் செல்லும் பயணிகள் பயன்பாட்டிற்கு கோடை காலத்தில் பொதுமக்கள் சிரமப்படுவதால் உடனடியாக தற்காலிக நிழற்குடை அமைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தி உள்ளார். அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15.ன்கீழ் தற்காலிக நிழற்குடை அமைக்கவும் மற்றும் கட்டணமில்லா கழிப்பிடம் பழுது நீக்கி அபிவிருத்தி செய்யவும் ரூ.79,000/– செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1812/2016/இ1)

| | |
|---|---|
| பொருள்– 07. | கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர்அவர்களின் ந.க.எண்.95/செமதொ/2017, நாள்–28.09.2017 கடிதத்தில், 'பாரத ரத்னா டாக்டர்.எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா சிறப்பு விளம்பரம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகளுக்கான தி இந்து பத்திரிக்கை விளம்பரம் M/s.Suba Advertising நிறுவனத்தாரால் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. செய்தி மக்கள் தொடர்பு துறையின் பத்திரிக்கைகளுக்கான விலை அட்டவணை வ.எண்.11.ல் ரூ.1,55,200/– கட்டணத்தினை, கரூர் நகராட்சி, குளித்தலை நகராட்சி, JR கூட்டுறவு, AD கனிமவளம் ஆகிய துறையினர் பகிர்ந்து செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நான்கில் ஒரு பங்கு தொகை ரூ.38,800/–ஐ, மேற்படி நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு– | 1). அனுமதிக்கலாம்.<br>2). ஆணையர் (ம) தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.2520/2017/இ1) |

பொருள்– 08.

குளித்தலை நகராட்சி 8.வார்டு பகுதியில் புதிய மின்மாற்றி தமிழ்நாடு மின்சார வாரியத்தால் அமைக்கப்பட்டு உள்ளது. அதிலிருந்து பிரிந்து செல்லக்கூடிய தெருவிளக்குகளுக்கு புதிய மின்இணைப்பு வாங்க வேண்டியது அவசியமாக உள்ளது. பொங்கல் பண்டிகை காரணமாகவும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அவசர காரணத்தாலும் புதிய மின்இணைப்பு பெற ரூ.1600/– தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அவசரஅவசியம் கருதி பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விபரம் கீழ்வருமாறுமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண். | விபரம் | விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் முகவரி | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1)<br>2)<br>3)<br>4)<br>5)<br>6)<br>7)<br>8)<br>9) | 1½x12 GI மெட்டல் பாக்ஸ்<br>18x12 மீட்டர் போர்டு–2<br>63x415 பியூஸ் காரியர்<br>7/16 வயர் அலுமினியம் 20–மீ<br>போல்ட் கிளாம் செட்–2<br>போல்ட்நட் செட்–8<br>25mm பைப்<br>25mm பெண்ட்<br>கட்டு கம்பி 100–கிராம் | 1). C.M.டிரேடர்ஸ், குளித்தலை. | 2780/– |
| | | 2). ஸ்ரீலட்சுமி டிரேடர்ஸ், குளித்தலை. | 2873/– |
| | | 3). ராசி எலக்ட்ரிக்கல்ஸ், குளித்தலை. | 2813/– |

அலுவலக குறிப்பு–

1). அனுமதிக்கலாம்.
2). குறைந்த விலைப்புள்ளி வழங்கிய C.M.டிரேடர்ஸ் நிறுவனம் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
3). அவசர அவசியம் கருதி ஆணையர்(ம) தனி அலுவலர் முன்அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதையும், பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.94/2018/இ1)

பொருள்– 09.

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட இனங்களுக்கு 2.வது மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 21.02.2018.ல் நடைபெற்றது.

1. பேருந்து நிலையத்திற்குள் வந்துசெல்லும் பேருந்து, கார் மற்றும் ஆட்டோ முதலிய வாகனங்களுக்கு நுழைவு கட்டணம் வசூல்செய்யும் உரிமம்.
2. இருசக்கர ஊர்திகள் நிறுத்துமிடம்.
3. தினசரி சாலைஓரக் கடைகளில் வசூல் செய்துகொள்ளும் உரிமம்.
4. ஆடு அடிக்கும் தொட்டி கட்டணம் வசூல்.

மேற்கண்ட இனங்களுக்கு 21.02.2018.ல் நடைபெற்ற மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டு எவரும் கேள்வி கேட்கவில்லை. எனவே, 3.வது மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3166/2017/அ1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சி அலுவலக UPS மூன்றின் இணைப்புகளுக்கு மின் உபகரணங்கள் வாங்க மன்ற தீர்மான எண்.213, நாள்–31.10.2017.ல் அனுமதிக்கப்பட்டதன்படி 06.11.2017.ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | விலைப்புள்ளிகள் பெறப்பட்ட நிறுவன முகவரி | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1) | அலுவலக கணினிகளுக்கான UPS மின் இணைப்பு கேபிள் இணைப்பு உபகரணங்கள் சப்ளைசெய்து பொருத்துதல் பணி | 1). C.M.டிரேடர்ஸ், 100இ,காவேரிநகர், குளித்தலை. | 11750/– |
| | | 2). ஸ்ரீலட்சுமி டிரேடர்ஸ், 45/சி,பேராளம்மன்கோவில்தெரு, குளித்தலை. | 12620/– |
| | | 3). ராசி எலக்ட்ரிக்கல்ஸ், சுங்ககேட், குளித்தலை. | 11900/– |

அலுவலக குறிப்பு– 1). குறைவான விலை விகிதத்திலான வ.எண்.1ல் கண்டுள்ள C.M.டிரேடர்ஸ் நிறுவன விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை ரூ.11750/– வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2742/2017/இ1)

..3..

பொருள்– 11. குளித்தலை நகராட்சி குடிநீர் பிரிவு லாரி TN-47-E-0264.ன் தகுதி சான்றினை புதுப்பிக்க, அவசர அவசியம் கருதி 27.11.2017.ல் லாரி ஓட்டுநர் திரு.பி.நேசமணி, தனது சொந்த பொறுப்பில் தகுதி சான்று ஆய்வுக் கட்டணம் ரூ.650/– மற்றும் புகை பரிசோதனை கட்டணம் ரூ.100/– ஆகியவற்றை செலுத்தி உள்ளார். அதன்படி ரூ.750/–ஐ, அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.

2). அவசர அவசியம் கருதி செலுத்தப்பட்ட ரூ.750/–க்கான தொகையினை திரு.பி.நேசமணி, ஓட்டுநருக்கு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2313/2017/இ1)

*******

# குளித்தலை நகராட்சி

28.02.2018.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 35 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 36 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 37 | பதிவு செய்யப்பட்டது. |
| 4 | 4 | 38 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 5 | 5 | 39 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 6 | 6 | 40 | பதிவு செய்யப்பட்டது. |
| 7 | 7 | 41 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 8 | 8 | 42 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 9 | 9 | 43 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 44 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 11 | 11 | 45 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |

ஒம்/– அ.வ.சையத் முஸ்தபா கமால்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.